**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | |
|---|---|---|---|
| Calender : | | Miscellaneous : | |
| Preliminary Register : | | Case No. : | **S.C.25/2024** |
| Sessions : | | | |
| Deposition of witness for : | | Prosecution : | **P.W. 8** |
| | | Defence : | **D.W.** |
| | | Court : | **C.W.** |

| **Name :** | அழகுதுரை | **S/o.(or)W/o. :** | நல்லதம்பி |
|---|---|---|---|
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **26.02.2025**

**அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். 1, 2, 3, 5 எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம் வடகராம்பூண்டியில் வசிக்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எதிரிகளுக்கும் எங்கள் குடும்பத்திற்கும் ஏற்கனவே தேர்தல் சம்பந்தமாகவும், நிலம் பிரச்சனை சம்பந்தமாகவும் முன்விரோதம் உள்ளது. 22.01.2017 அன்று காலையின் என் அப்பா நீர்இறைக்க திருவாளந்துறையிலுள்ள எங்களுடைய வயலுக்கு சென்றார். நான் வடகராம்பூண்டியிலுள்ள எனது காட்டில் நீர்பாய்ச்சி கொண்டிருந்தேன். நான் நீர் இறைத்து கொண்டிருக்கும் போது காலை 9.00 மணியளவில் ஆற்றங்கரையில் சத்தம்கேட்டது. நான் வேறுயாரோ சத்தம் போட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்று நினைத்து கொண்டிருந்தேன்,. பிறகு அது என் அப்பாவின் குரலாக இருந்தது. நான் நிலத்திலிருந்து சம்பவ இடத்திற்கு போனேன். நான் நீர் பாய்ச்சிக்கொண்டிருந்த இடத்திற்கும் ஆற்றங்கரைக்கும் சுமார் 300மீ தூரம் இருக்கும். நான் வாய்க்காலில் இருந்து

கீழே இறங்கும்போது எதிரிகள் என்அப்பாவை அடித்துக் கொண்டிருந்தார்கள். நான் பார்த்தபோது என் அப்பா தரையில் விழுந்து கிடந்தார் அவர் வந்த வண்டி ஒரு பக்கமாக கிடந்தது. கட்டையாலும், இரும்பு கம்பியாலும் எதிரிகள் அடித்துக்கொண்டிருந்தார்கள் நான்அருகில் போனவுடன் ஆஜர் எதிரிகளும், அவருடன் இருந்த செல்லதுரையும் ஓடிவிட்டார்கள். அதன் பிறகு நான் 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்தேன். அவர்கள் வர நேரமானதால் ஊரிலிருந்து டாடாசுமோ காரில் என் அப்பாவை ஏற்றிக் கொண்டு வி.களத்தூர் காவல்நிலையம் சென்றேன். காவல்நிலையத்தில் ஆய்வாளரும், உதவி ஆய்வாளரும்இல்லை.ஏட்டையா தான் இருந்தார். அவர் காயம்அதிகமாக இருப்பதால் உடனடியாக மருத்துவமனைக்கு போகும்படியும், அங்கு வந்து விசாரிப்பதாகவும் சொன்னார். மருத்துவமனை சென்றோம். அங்கு மருத்துவர் எப்படி காயம் ஏற்பட்டது என்று விசாரித்தார்கள். எதிரிகள் கம்பியாலும் கட்டையாலும் அடித்தது பற்றி சொன்னோம். பிறகு என் அப்பாவை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தார்கள். அன்று மாலை 5 மணியளவில் உதவி ஆய்வாளர் சுரேஷ் மருத்துமனைக்கு வந்து என் அப்பாவை விசாரித்தார். என் அப்பாவிற்கு அதிக காயம் இருந்ததால் மறுநாள் அரசு மருத்துவமனையிலிருந்து விடுவிப்பு பெற்றுக்கொண்டு மது தனியார் மருத்துவமனைக்கு சென்றோம். 28.01.2017 ல் என் அப்பாவிற்கு அறுவை சிகிச்சை செய்தார்கள். 1 மாதத்திற்கு மேலாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யாததால் என் அப்பா டிஜிபி அலுவலகத்திற்கு சென்னைக்கு சென்று புகார் கொடுத்தார். அதன் பிறகு 03.03.2017 ல் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்கள். அதன் பிறகு 2021ல் சுமதி என்ற ஆய்வாளர் வீட்டிற்கு வந்து விசாரித்தார். நடந்ததை சொன்னேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் பி.இ. ஆட்டோமொபைல் இன்ஜினியரிங் படித்துள்ளேன். எங்களுக்கும் ஆஜர் எதிரிகளுக்கும் எனக்கு விவரம் தெரிந்து பேச்சுவார்த்தை

இல்லை. ஆய்வாளர் சுமதி எங்களை விசாரித்து எழுதிக்கொண்டார். அவருடன் வேறு யார் வந்தார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. 2021க்கு பிறகு என்னை போலீசார் விசாரிக்கவில்லை. என் அப்பா கல்யாணசுந்தரத்தின் மீது திட்டக்குடி உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு போட்டுள்ளார் என்றால் சரிதான். ஆய்வாளர் என்னை விசாரித்த போது சம்பவம் நேரில் தெரியும் என்று தான் சொல்லியுள்ளேன். என் அம்மாவிற்கு சம்பவம் நேரில் தெரியாது. என்னிடம் காட்டப்படும் குவிமுச 161 வாக்குமூலத்தில் வடிவேல் என்பவர் சொல்லிதான் தெரியும் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் அது தவறு. என் அப்பா போலீசார் விசாரணையிலும் முதல் விசாரணையிலும் சம்பவம் எனக்கும் என் அம்மாவுக்கும் நேரடியாக தெரியது என்று சொல்லியிருந்தால் அது என்அம்மாவுக்கு நேரடியாக தெரியாது என்று சொல்வது சரி. எனக்கு நேரில் தெரியாது என்று சொல்வது தவறு. போலீசார் விசாரணையில் கட்டையால் அடித்ததாகதான் எழுதப்பட்டுள்ளது என்றும் இரும்பு கம்பி அல்லது பைப்பால் அடித்ததாக எழுதப்படவில்லை என்று சொன்னால் அது அவர்கள் எழுதாமல் விட்டிருக்கலாம். என் அப்பா சுயநினைவு முழுவதுமாக் இழக்கவில்லை வலியுடன் சத்தம் போட்டு கொண்டுதான் இருந்தார். என் அப்பாவிற்கு தலையில் காயம் இல்லை. என் அப்பாவை கட்டையால் அடித்த இடத்தில் லேசாக இரத்த கசிவு இருந்தது. என் அப்பாவின் முதுகில் லேசான இரத்த காயம் இருந்தது. என் அப்பா வேஷ்டியும், துண்டும் அணிந்திருந்தார். சட்டை போடவில்லை. என் அப்பா அணிந்திருந்த வேஷ்டியில் இரத்தக்கரை இருந்தது. நான் காவல்நிலையத்திற்கு சென்றபோது என் அப்பாவிற்கு சுயநினைவு இல்லை என்னிடம் தான் போலீசார் பேசினார். வி.களத்தூரிலிருந்து பெரம்பலூர் அரசு மருத்துவமனை வர சுமார் 1/2 மணி நேரம் ஆகும். மருத்துவமனைக்கு போன போது என் அப்பா பாதி சுயநினைவுடன் இருந்தார். மாலையில் சுரேஷ் உதவி ஆய்வாளருடன் இன்னொரு போலீசாரும் வந்திருந்தார். என் அப்பா தான் புகாரில் கையெழுத்து போட்டார். விசாரிக்க வந்த போலீசார் தான் புகாரை எழுதினார். புகார்

கொடுத்ததற்கு காவல்நிலையத்திற்கு வந்து ரசீது வாங்கி கொள்ள சொல்லி மருத்துவமனைக்கு வந்திருந்த போலீசாரில் யார் சொன்னார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. இரண்டு நாட்கள் கழித்து மறுபடியும் மருத்துவமனைக்கு வந்து உதவி ஆய்வாளர் சுரேஷ்  விசாரித்தார். அதன் பிறகு 03.03.2017 ல் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்கள்.  எதிரிகளை என் முன்பாக கூப்பிட்டு விசாரிக்கவில்லை. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பிறகு நாங்கள் யாரும் மங்களமேடு காவல்நிலையத்திற்கு போகவில்லை. நான் சொல்வது போல சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும் அதைநான் பார்க்கவில்லை என்றும் புகார்தாரர் என் அப்பா என்பதால் அவருக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

Sd/-A. Balkis, B.L.,
Principal District Judge
Perambalur.